1975 மார்ச் 25]

(இ) ஆமெனில், அதற்குரிய நிதி பங்கீடு மக்களிடமிருந்து பெறப்பட்டதா ?

(உ) இத்திட்டம் நிறைவேற எவ்வளவு காலம் ஆகும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 32 வீடுகளைக் கட்ட இருக்கிறது. 26 வீடுகளுக்கு நிதிப் பங்கீடு பெறப்பட்டுள்ளது.

(உ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தை 1975–76 ஆண்டின் முடிவிற்குள் நிறைவேற்றிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, இந்த வீடுகள் யார் யாருக்கு வழங்கப்படும் என்பதைப்பற்றி நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீடுகள் என்ற அளவில் பத்தாயிரம் ரூபாயில் இந்த வீடு கட்டுவது என்ற திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. பத்து சதம் முன்பணமாகக் கொடுப்பவருக்கு இந்த வீடு தரப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, ஒரு மாதத்திற்கு ஒரு ரூபாய் அல்லது ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் என்று கட்டினால், அதற்குரிய விதத்திலே ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் கீழ் இது வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அது வேறு திட்டம், இது வேறு திட்டம். தினசரி ஒரு ரூபாய் கட்டினால், ஐந்தாண்டுகள் கழித்து ஒரு வீடு கிடைக்கும். பத்தில் ஒரு பங்கு கட்டினால், ஒரு குறைந்த அளவு காலத்தில் இரண்டு அல்லது மூன்று மாதம் அல்லது ஐந்து அல்லது ஆறு மாதத்தில் இந்த வீடு அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Solvency Certificates for Trustees

* 188 *Q.*—THIRU S. S. THENNARASU (on behalf of THAVATHIRU KUNDRAKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government have received any representation to the effect that the members of the Scheduled Castes who are appointed as Trustees of Temples should be exempted from producing Solvency Certificates ; and

(*b*) if so, the steps taken thereon by the Government?

அறங்காவலர்களின் சொத்து அத்தாட்சி

திரு. எஸ்.எஸ். தென்னரசு (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருக்கோயில்களில் அறங்காவலர்களாக நியமனம் பெறும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் சொத்து அத்தாட்சி தர வேண்டுமென்ற விதியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Harijan Welfare Department Schools

* 189 Q.—THIRU K. ARIVAZHAGAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the order issued to the effect that Grade-I scale of pay should be extended to the fully qualified Grade-II Tamil Pandits will apply to the teachers of the Harijan Welfare Schools also;

(*b*) if so, whether the fully qualified Grade-II Tamil Pandits of Harijan Welfare Schools in Chingleput District are being paid Grade-I scale of pay; and

(*c*) if not, whether the Government will take necessary action therefor?

அரிசன நலத்துறைப் பள்ளிகள்

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முழுத்தகுதியுள்ள இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு முதுநிலை ஊதியம் வழங்கப்படவேண்டும் என்னும் அரசு ஆணை அரிசனநலத் துறைப் பள்ளிகளுக்கும் (Harijan Welfare Schools) பொருந்துமா?

(இ) ஆமெனில், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள அரிசனநலத் துறை பள்ளிகளில் முழுத்தகுதியுடன் பணியாற்றும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு முதுநிலைத் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறதா?